விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25
ஒலி 255 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 14 வெள்ளிக்கிழமை (30.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

# 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படும்

## தேர்தல் விஞ்ஞாபனத்தில் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

- அனைவரது கருத்துக்களையும் பெற்று புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும்.
- 6 மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தல்.
- படையினர் கட்டுப்பாட்டிலுள்ள நிலங்கள் விடுவிக்கப்படும்.
- யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்படும்.

(16ஆம் பக்கம் பார்க்க)



### வாக்குறுதிகளை அள்ளி வழங்கி

## பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியுற இடமளியேன்


### தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

வாக்குறுதிகளை அள்ளி வழங்கிப் பொருளாதாரத்தை மீண்டும் வீழ்ச்சியடைய இடமளிக்க மாட்டோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)

## தங்க ரதத்தில் நல்லூரான்



### கொடிகாமம், சாவகச்சேரிப் பகுதிகளில்

## ஒரே நாளில் 25 டிப்பர்களை மடக்கிப் பிடித்த பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம், சாவகச்சேரிப் பகுதிகளில்நடத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 25 டிப்பர்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

அனுமதிப் பத்திரங்களின்றி மணலுடன் 24 டிப்பரும் அனுமதியின்றி மரக்குற்றிகளுடன் ஒரு டிப்பரும் என 25 டிப்பர்கள் கொடிகாமம், சாவகச்சேரிப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

யாழ்ப்பாணப் 15

## அனைவரும் ஒருமித்து தமிழர் வாக்குகளை உபயோகமான முறையில் பயன்படுத்துக

### தமிழ்ப் பிரதிநிதிகளிடம் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர்

(கொழும்பு)

அனைவரும் ஒருமித்து தமிழர் வாக்குகளை உபயோகமான முறையில் பயன்படுத்துவதே சிறந்தது எனத் தமிழ்ப் பிரதிநிதிகளிடம் இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் தெரிவித்துள்ளார்.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலுக்கும், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற சந்திப்பின்போது தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரம், தேர்தல் புறக்கணிப்பு கோஷம் உள்ளிட்ட பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரை 16

### வவுனியாவில் பெண் கடத்தல்

## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் கைது

(வவுனியா)

வவுனியாவில் இருந்து குடும்பப் பெண் ஒருவர் கடத்தப்பட்ட நிலையில் அவர் மீட்கப்பட்டதுடன் வானுடன் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, கொக்குவெளி, அரசடி வீதியில் வசித்து வந்த குடும்பப் பெண் ஒருவரை யாழ்ப்பாணத்தில் இருந்து வான் ஒன்றில் வந்த குழுவினர் கடத்திச் 15

## சங்கானையில் வெதுப்பகம் ஒன்றுக்கு சீல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சங்கானை சுகாதாரப் பிரிவிற்குட்பட்ட பகுதியில் நீண்டகாலமாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றாது செயற்பட்டு வந்த வெதுப்பகம் ஒன்று சீல் வைக்கப்பட்டுள் 15

### வவுனியாவில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட

## யாழ்.சில்லாலையைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் மரணம்

(வவுனியா)

வவுனியாவில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மரணமடைந்துள்ளதாகப் பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.



இதில் யாழ்ப்பாணம் சில்லா 15

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றிலிருந்து 240 மில்லியன் பெறுமதியான போதைப்பொருள் மாயம்

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் வழக்குப் பொருட்கள் அறையில் வைக்கப்பட்டிருந்த 240 மில்லியன் ரூபா பெறுமதியுள்ள 12 கிலோ ஹெரோயின் போதைப் பொருள் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்குத் தொடர்பான இந்த ஹெரோயின் கையிருப்பு, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தின் வழக்குப் பொருட்கள் அறையில் வைக்கப்பட்டிருந்தது.

அரசபுலனாய்வுசேவை அதிகாரி போன்று தன்னை அடையாளப்படுத்திய நபர் ஒருவர் அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் முன்னிலைப்படுத்தப்படவிருந்த குறித்த ஹெரோயின் போதைப் பொருளை எடுத்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அரசபுலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 'தரிந்து யோஷித' எனத் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் நபர் ஒருவரே ஹெரோயின் போதைப் பொருளைக் கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, சந்தேக நபரை அடையாளம் காண விசாரணைகளை ஆரம்பிக்குமாறு அரசபுலனாய்வுப் பிரிவினருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-7)

# நாட்டில் மீண்டும் சிவில் போர் வெடிக்கும் அபாயம்

## ஐ.தே.க தவிசாளர் வஜிர அபேவர்தன

நாட்டில் மீண்டும் சிவில் போர் வெடிக்கும் அபாயம் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள், ரணில் தவிர்ந்த வேறு வேட்பாளர்களுக்கு வாக்களித்தால் இவ்வாறு போர் வெடிக்க வாய்ப்பு உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலிப் பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்காக எவ்வாறான வேட்பாளர்கள் போட்டியிட்டாலும், மக்களுக்கு சேவையாற்றிய தலைவராக ரணில் விக்கிரமசிங்க மட்டுமே திகழ்கின்றார் என அவர் தெரிவித்துள்ளார்.


தேர்தலில் வெற்றியீட்டும் நோக்கில் ஏனைய வேட்பாளர்கள் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி வருவதாகவும், எனினும் அந்த வாக்குறுதிகள் நடைமுறைக்குச் சாத்தியமற்றவை எனவும் கூறியுள்ளார்.

வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்றுக் கொள்வதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க செய்யக்கூடிய விடயங்களை மட்டுமே எல்லா சந்தர்ப்பங்களிலும் கூறுவார் எனவும், அது ஒரு தலைவரிடம் இருக்கக் கூடிய உயரிய பண்பாகும் எனவும் வஜிர அபேவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

வஜிர அபேவர்தன இந்த சிவில் போர் வெடிக்கும் என்ற கருத்தைப் பல்வேறு மேடைகளில் தெரிவித்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 29.11.1946 மறைவு 28.08.2024

எமது பிரதேச செயலக J/389 வல்வெட்டித்துறை வடமத்தி கிராம உத்தியோகத்தர் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திரு. அருந்தவராசா ஞானகரன்** அவர்களுடைய அன்புத் தந்தையார்

### கார்த்தி அருந்தவராசா

அவர்கள் 28.08.2024 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்... **பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

(C-1081)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1979 - 05 - 16 | 2024 - 08 - 28 |



### இராசையா தர்மசேனன்

(கண்டி சில்வஸ்டர் மாணவன்)

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் கண்டி மற்றும் கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா தர்மசேனன் அவர்கள் நேற்று முன்தினம் 28.08.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராசையா - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் அனோஜாவின் அன்புக் கணவரும் அகலியன், அகிலன், அக்சயன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் லோகீசன் காலஞ்சென்ற ஜெகதீசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கைதடி, வடக்கு. WhatsApp No : 074112 2823 தொலைபேசி இல. : 074146 9176

தகவல்: குடும்பத்தினர் சி.[illegible](அப்பா) இ.லோகீசன்(சகோதரன்)

(1821)

## 34 ஆவது பிறந்ததினமும் 16 ஆவது ஆண்டு நினைவஞ்சலியும்



### செல்வி கணேசலிங்கம் பத்மஜா


மலர்வு 30.08.1990 உதிர்வு 15.08.2008

ஈர விழிகளுடன் ஈரெட்டு ஆண்டுகள்
பாரில் கடந்து விட்டோம் பத்மஜா
காலன் கவர்ந்ததென்ன கண்மணியே
நாளும் உன் நினைவுகள் சுமந்து
பாழும் உலகினிலே பரிதவித்து நிற்கிறோம்
வீழும் வரையில் உன் நினைவுகள் சுமந்தவராய்

பேக்கரி வீதி, புத்தூர் கிழக்கு, புத்தூர். குடும்பத்தினர்

(C-1077)

## 11 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 17 05 1940 மறைவு 01 09 2013

### அமரர் சங்கரப்பிள்ளை நாகராஜா

திதி : தேய்பிறை துவாதசி


வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வத்தில்
ஒன்றாகக் கலந்திருக்கும் எங்கள்
அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனை வேண்டுகிறோம்.

[illegible]தோர் வீதி, சாவகச்சேரி.

தகவல் : மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(296)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





## ஆரம்பப் பொது வழங்கல் (IPO)
## 2024 செப்டம்பர் 10ம் திகதி ஆரம்பம் !

**1,379,310,400** வரையான புதிய சாதாரண வாக்குரிமைப் பங்குகளை, ஒரு பங்கின் விலை ரூபா **14.50** வீதம் மொத்தமாக ரூபா **20,000,000,800/-** வரையான நிதியை திரட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

QR குறியீட்டை ஸ்கேன் செய்து அல்லது **www.ltl.lk/ipo** ஊடாக தகவல் தொகுப்பை (Prospectus) பதிவிறக்கம் செய்து மேலதிக விவரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

பொது வழங்கலுக்கான கூட்டு மேலாளர்கள்

NDB Investment Bank
CT CLSA Commitment. Trust. Continuity


LTL HOLDINGS LIMITED

(C-2390)

இலங்கையின் மாபெரும் ஆரம்பப் பொது வழங்கல் (IPO)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பரா ஒலிம்பிக் ஜோதியை ஏந்திச் சென்ற ஜாக்கிசான்



நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகள் பிரான்ஸில் கோலா கலமாக நடந்து முடிந்தது. அதைத் தொடர்ந்து மாற்றுத்திறனாளிக ளுக்கான பரா ஒலிம்பிக் போட்டி பாரிஸில் தொடங்கியுள்ளது.

செப்ரெம்பர் 8 ஆம் திகதி வரை நடைபெற உள்ள போட்டிகளில் 184 நாடுகளைச் சேர்ந்த 4,400 மாற்றுத் திறனாளி வீர, வீராங்கனைகள் போட்டியிடுகின்றார்.

நேற்று ஆரம்பமான பரா ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழா கோலாகலமாக நடைபெற்று வானில் ஒலிம்பிக் கொடியின் வண்ணங்களை புகையாக கக்கி யபடி விமானங்கள் பறந்தன.

பரா ஒலிம்பிக் ஜோதி எடுத்துச் செல்லும் பேரணியில் பிரபல ஆக்ஷன் நடிகர் ஜாக்கிசான் கலந்து கொண்டு ஜோதியை ஏந்திச் சென்றார்.

போட்டியைப் பார்க்க இதுவரை 20 லட்சத்திற்கும் அதிகமான டிக்கெட்டுக்கள் விற்பனையாகி இருப் பதாகவும் கடைசி நாள் வரை டிக்கெட் விற்பனை நடைபெறும் என்றும் போட்டி ஒருங்கிணைப்பு கமிட்டி தெரிவித்துள்ளது. (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 220 | 150-200 |
| உருளைக்கிழங்கு | 160 | 200 | 180 | 180 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 150 | 120-150 |
| தக்காளி | 250 | 300 | 250 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 180 | 150-200 |
| கோவா | 200 | 300 | 250 | 350 |
| கரட் | 300 | 320 | 350 | 300 |
| பூசணி | 80 | 140 | 100 | 80 |
| புடோல் | 70 | 120 | 100 | 80 |
| வாழைக்காய் | 200 | 250 | 200 | 200-250 |
| சின்ன வெங்காயம் | 280 | 280 | 300 | 150-300 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 220 |
| பாகற்காய் | 300 | 350 | 300 | 350 |
| வெண்டக்காய் | 70 | 100 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 160 | 150 |
| பயற்றங்காய் | 150 | 140 | 120 | 100-150 |
| லீக்ஸ் | 300 | 350 | 500 | 360 |
| பீற்றூட் | 100 | 140 | 150 | 200 |
| கறிமிளகாய் | 350 | 600 | 600 | 470 |
| முருங்கைக்காய் | 400 | 200 | 100 | 100-150 |
| போஞ்சி | 300 | 600 | 600 | 450 |
| கத்தரி தம்புள்ள | 150 | 150 | 250 | -- |
| கீரை - 1 பிடி | 120 | 140 | 50 | 60 |
| தேசிக்காய் | 400 | 400 | 500 | 250-300 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 130 | 140 | 80-120 |
| இராசவள்ளி | -- | 700 | 650 | 600 |
| வெங்காயப்பூ | 300 | 200 | 300 | -- |
| முள்ளங்கி | 120 | 120 | 150 | 80 |
| பொன்னாங்காணி | 100 | 90 | 100 | 90 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 70 | 100 | 50 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3209

### தனுஸ்காந்




### அபிஷா




### திவ்யா




### சக்தி




### சுலக்ஷன்




### ஐங்கரன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். திருமதி.

# மகாலட்சுமி இராஜலிங்கம்

தோற்றம்
27.08.1934

மறைவு
21.08.2014



நீங்கா நினைவில் லிங்கம்மா !
சிற்பனை ஊரிலும் யாழ்ப்பாணம் நீராவியடியிலும்
பின் லண்டனிலும்
வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த
திருமதி மகாலக்ஷ்மி இராஜலிங்கம்
அவர்களின் பத்தாவது ஆண்டு நினைவில் !

ஒருபத்து ஆண்டின் முன்பாய்
எம்மோடு இருந்தாய் அம்மா!
புருவத்தை உயர்த்தி நாங்கள்
புன்னகைத்து இருந்தோம்! அன்பின்
உருவத்தின் கையால் உண்டு
உவகை கொண்டோம்; எங்கள்
பெரும் சொத்தைக் காலம் பறித்துப்
புலம்பிட வைத்த தேனோ?

லிங்கம்மா என்று வந்து நீராவியடியில் கேட்டால்
எங்கம்மா என்று எவரும் உரிமையாய் அழைக்கும் அம்மா!
தங்கம்மா போன்று லண்டன்
தேசமும் வந்து வாழ்ந்த
"லிங்கம்மா" மறைந்த தேனோ?
மறவாது நினைக்கத் தானோ?

உண்மையாய்ப் பழகி உன்போல்
உயிரினில் அன்பைச் சொரிய,
மென்மையாய்ப் பேசி மற்றவர்
மனமறிந்து உதவி புரிய,
நன்மையாய் நினைத்து வாழ்வில்
நல்லதற்கெல்லாம் உதவ;
முன்நின்ற அன்னையைப் பிரிந்து
முடிந்ததோ பத்து ஆண்டு?

முன்பின் அறியா தோர்க்கும்
முகவரி நீதான்! உண்மை
அன்பின் பெறுமதி உரைத்த
முழுமதி நீதான்! மனிதப்
பண்பின் இலக்கணம் நீதான்!
படைப்பின் மகத்துவம் நீதான்!
உன்பின் நின்றவர்க் கெல்லாம்
உச்சம் கொடுத்தவள் நீதான்!

எங்கம்மா லிங்கம்மா ஆத்ம சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்

[1702]

நீராவியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுர ஜனாதிபதியானால் 6 மாதம் தான் பதவியில் இருப்பார்

## ஹிருணிகா எதிர்வு கூறல்

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியானால் அதிகபட்சமாக 6 மாத காலம் தான் அந்தப் பதவியில் இருப்பார் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

மீரிகம பிரதேசத்தில் இடம்பெற்ற அரசியல் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே திருமதி ஹிருணிகா பிரேமச்சந்திர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2000 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்த அநுர குமார திஸாநாயக்க மக்களுக்காக எந்த நடவடிக்கையும் எடுக்காதவர்.

அப்படிப்பட்ட ஒருவரால் தற்போதைய இலங்கையை அபிவிருத்தி செய்ய முடியும் என நம்பமுடியுமா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார். (நி-6)

# நல்லூர் உற்சவ கால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற் சவ காலத்தை முன்னிட்டு இளங் கலைஞர் மன்றம் மற்றும் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று வெள்ளிக்கிழமை நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் இடம்பெறும். மாலை 6.45 தொடக்கம் 7.10 மணி வரை இடம்பெறவுள்ள ஸ்ரீவாசனாஸ்வராலய குழு இசை நிகழ்வில் ர.கார்த்தியாயினி, ர.நிலுக் சியா, ஜெ.ஜதுசியா, மு.சத்யா, யோ.சங்கீதா, சி.அபிராமி, ச.இந்துலக்ஷனா, ச.ஓவியா, ப.கனிஸ்ரா, பா.பிரசன்யா, தி.வைஸ்ணவி, சி.மதுவிதா, ர.அக்தயா, சோ.சஜீக்கா, ஜெ.ஜெனிற்றா மற்றும் வயலின்- கே.வேலதீபன், மிருதங்கம்- அ.சண் முகப்பிரியன், கஞ்சிரா- பு.வேணுகாந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். அதனைத்தொடர்ந்து 7.15 - 8.05 மணிவரை இசை அர்ச்சனைக் குழுவின் வயலின் இசை அரங்கு நிகழ்வில் வயலின்- வாசுகி.சுவாமிநாதன் சர்மா, நந்தினி சுவாமிநாதன் சர்மா, மிருதங்கம்- எ.ஜி.எஸ் சுவாமிநாதன் சர்மா, சு.அரவிந்தன் சுப்ர மணிய சர்மா, கஞ்சிரா-சு.ஆனந்த நாராயணன் சர்மா ஆகியோர் நிகழ்த்த வுள்ளனர். (நி-6)

# தேர்தல் தொடர்பில் 1,347 முறைப்பாடுகள்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை (ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி வரை) 1,347 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 561 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 724 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. இதேவேளை மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன் முறைச் சம்பவங்கள் தொடர் பில் 6 முறைப்பாடும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 56 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. (நி-6)

# புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா நாளை

(புதுக்குடியிருப்பு)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகமும் புதுக்குடியிருப்பு பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் 2024 ஆம் ஆண்டுக்கான புதுக்குடியிருப்பு பிரதேச பண்பாட்டுப் பெருவிழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மு/உடையார்கட்டு மகாவித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தின் கந்தப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை அரங்கில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் பதில் பிரதேச செயலாளரும், புதுக்குடியிருப்பு பிரதேச கலாசாரப் பேரவையின் தலைவருமான சி.ஜெயகாந்த் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம், சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் செல்வி. இராமசாமி மதியரசி ஆகியோர்கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவ் விழாவில் புதுக்குடியிருப்பு பிரதேச கலைஞர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதுடன் விசேட நிகழ்வாக புதுவைக் கலைச்சுடர் விருது வழங்கும் வைபவமும் இடம்பெறவுள்ளது. (நி-6)

## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் சபைக்குச் சொந்தமான கடையினை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்

சபைக்குச் சொந்தமான கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் விவரிக்கப்பட்ட கடையினை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கீழ் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நல்லூர் பிரதேச சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி:- 30.08.2024ஆம் திகதி தொடக்கம் 13.09.2024ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 13.09.2024ஆம் திகதி பி.ப 12.00 மணிவரை

கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 13.09.2024ஆம் திகதி பி.ப 12.00 மணிக்கு

கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் :- கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை.

**நீண்டகால குத்தகை**

| தொ. இல | கடை விபரம் | மாதாந்த வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (VAT, NBT நீங்கலாக) | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| 01 | கொக்குவில் மரக்கறிச் சந்தையுடன் இணைத்துக் கட்டப்பட்ட கடை இல 06 | 9,500.00 | 2,280,000.00 | 22,000.00 | 2,000.00 |

கேள்வி தொடர்பான நிபந்தனைகள், மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை,
30.08.2024.

(C-1078)




# சேவை நலன் பாராட்டு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பௌதிகவியல் ஆசிரியராக சேவையாற்றி 28.08.2024 அன்று ஓய்வு பெற்ற

திருமதி. கிருபா ஜனகேஸ்வரன்
(SLTS-I)

"இயற்பியல் விதிகளை மாணவர் புரிந்திட செயற்றிறன் மிக்க செயன்முறை வடிவில் பல நூறு மாணவர் பயின்றிட வைத்திட்ட பண்பான வடிவமே எளிமையின் சிகரமே"

தங்கள் ஓய்வுக்காலத்தில் மேலும் சீரும் சிறப்புடன் வாழ்ந்திட வாழ்த்தும்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உயர்தர கணித விஞ்ஞானப் பிரிவு ஆசிரியர்கள்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு

21.08.2014 அன்று சிவபதமடைந்த

அமரர்.திருமதி.

## இராஜலிங்கம் மகாலட்சுமி

அவர்களின்



10 ஆம் ஆண்டு அஞ்சலிக் கிரியைகள் 30.08.2024 இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நீராவியடி இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் மதிய போசன நிகழ்வும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாங்களும்
இந்த மண்ணும்
உன்னை இழந்து
பத்து வருடங்களாகிவிட்டது!

நீ எம்மை சுமந்து
அந்த பத்து மாதங்களை
எங்களால் இறக்கி
வைக்க முடியவில்லை!

பத்து மாதங்கள் மட்டுமா
நீ உயிர் சுமந்து
உலவிய காலம் மட்டும்
எம்மையும் சுமந்தாயே
தாயே!

நீ தீயில் எரிந்து
கொண்டும்
எங்கள் மீது
பூக்களையல்லவா
சிந்தியவள் தாயே!

எங்கள் சின்னச்
சிரிப்பொன்றிற்காக
எத்தனை வேதனைகளை
உன் நெஞ்சிற்குள்
மறைத்திருப்பாய்
அம்மா! அம்மா!

எங்கள் உடல் உயிர்
எத்தனை மகிழ்ச்சிகளும்
மொத்த சொத்தும்
தாயே நீயல்லவா

எங்கள் உயிர் அணுக்கள்
ஒவ்வொன்றும்
உன் நினைவு தாங்கி
தவிக்கிறது தாயே!

இந்த பூமியின்
முதலும் முடிவும்
அம்மா என்ற
சொல்லில் தான்
உறைந்து கிடக்கிறது
அம்மா! அம்மா!

84, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

மகன்-யாழ் நீராவியடி கண்ணன்
மற்றும் அம்மையாரின் மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(சி-1076)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# களைகட்டிய 'தக்காளி திருவிழா'

## ஸ்பெயினில் கோலாகலம்



(மாட்ரிட்)
ஸ்பெயினில் கோலாகல மாக நடந்த தக்காளி திரு விழாவில் பெருந்திரளா னோர் கலந்து கொண்டனர்.


பினோல் நகரில் நடந்த லா டொமாடினா எனப்படும் தக்காளித் திருவிழாவில் ஒரு ட்ரக்கில் கொண்டு வரப்பட்ட தக்காளியை ஒருவர் மீது ஒருவர் வீசி உற்சாகக் கொண்டாட் டத்தில் ஈடுபட்டனர்.

கூழாக்கப்பட்ட தக்காளி ஜூஸில் ஆனந்தமாக குளிய லிட்டு மகிழ்ந்தனர். தொடர்ந்து அவர்களுக்கான நூதன விளையாட்டு போட் டிகளும் நடத்தப்பட்டன.

1945 ஆம் ஆண்டில் தக்காளி விளைந்திருந்த பகுதிகளில் குழந்தைகள் தக்காளியை வீசியெறிந்து விளையாடியதே இந்த திரு விழாவிற்கான ஆரம்பப் புள்ளி எனக் கூறப்படுகிறது. ஸ்பெயினில் பிரபலமான இந்த தக்காளிச் சண்டை திருவிழாவை காண உல கம் முழுவதும் இருந்து ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தனர். தக்காளி திருவிழாவிற்காக சுமார் 150 தொன் கணக் கில் தக்காளிகள் பயன் படுத்தப்பட்டன. (நி-6)

# குஜராத்தில் கனமழை

## 25 ஐ தாண்டிய உயிரிழப்பு



(டில்லி)
குஜராத் மாநிலத்தில் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்பில் சிக்கி உயிரி ழந்தோர் எண்ணிக்கை 25ஐ தாண்டியுள்ளது. பெரும்பாலான பகுதிகளில் மழைநீர் சூழ்ந்துள்ளது.

இதனால், 17 ஆயிரத் திற்கு மேற்பட்ட மக்கள் தங்கள் இருப்பிடத்தில் இருந்து பாதுகாப்பான இடங் களுக்கு மாற்றப்பட்டுள்ள னர். தொடர்ந்து பாதிக் கப்பட்டவர்களை மீட்கும் பணியில் பேரிடர் மீட்புப் படையினர் ஈடுபட்டுள்ள னர்.

வீடுகளில் இருந்து வெளியேற முடியாமல் தவித்து வரும் மக்களை படகு மூலம் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் மீட்டுள்ளனர். குஜராத்தில் 122 அணைகள் முழு கொள்ளளவை எட்டியுள்ள தால் அங்கு கண்கா ணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள் ளது. (நி-6)

# குரங்கம்மை! வேக

## கலங்கி ந

(ஜெனீவா)

ஆபிரிக்கா நாட்டில் குரங் வைரஸானது மிகவேகமாக கொங்கோவிலிருந்து புருண்டி, உகாண்டா அண்டை நாடுகளு ளது. இதனால் உலக நாடுகள்

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் இந்த 4 ஆபிரிக்க நாடுகளில் 222 பேர் க்ளேட் 1பி வைரஸால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

ஆபிரிக்க நாடுகளுக்கு சென்று திரும்பியவர்களில் சுவீடன் மற்றும் தாய்லாந்தில் தலா ஒருவருக்கு பாதிப்பு ஏற்பட் டுள்ளது.

இதில், கொங்கோவில் மட்டும் ஏறத்தாழ 18 ஆயிரம் பேர் க்ளேட் ஐ மற்றும் க்ளேட் ஐடி வைரஸால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

# இந்தியாவில் காற்று மாசு; ஆயுட்காலம் குறையும் அபாயம்

## ஆய்வில் தகவல்



(டில்லி)
இந்தியாவில் காற்று மாசு தொடர்ந்து நீடித்து வந்தால் மக்கள் வாழும் தங்கள் வாழ்நாளில் 3.4 ஆண்டுகளை இழக்க நேரி டும் என அமெரிக்காவில் உள்ள சிக்காகோ பல்லைக் கழகம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

2021 ஆம் ஆண்டின் காற்று மாசுப்பாட்டை காட் டிலும் 2022 ஆம் ஆண் டில் காற்று மாசுபாடு 19.3 சதவீதம் குறைந்துள்ளது. காற்று மாசுபாடு இதே போன்று நிலைத்திருந்தால் இந்தியாவில் வாழும் மக் கள் சராசரியாக 3.4 வருட வாழ்நாளை இழக்க நேரி டும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வளர்ந்து வரும் அதிக மக்கள் தொகையின் காரணமாக காற்று மாசுபாட்டிற்கான சுமையை இந் தியா எதிர்கொள்வதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.


இந்தியாவின் மிகவும் மாசுபட்ட பகுதி வடக்கு பகுதி ஆகும். இது 50 கோடிக்கும் அதிகமான மக்கள் மற்றும் நாட்டின் மக்கள்தொகை யில் கிட்டத்தட்ட 40 சதவீதம் பேர் வசிக்கும் பகுதியாகும். 2022ஆம் ஆண்டில் இந்தப் பகுதியில் காற்று மாசின் தரநிலை அளவு 17.2% குறைந்தாலும், இந்த மாசு நிலை கள் நீடித்தால் மக்கள் வாழ்நாளில் 5.4 ஆண்டுகளை இழக்க நேரிடும் என்று கணிக்கப்பட் டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்த்ததை விட ...கமாக திரிபடைகிறது!

## ...நிற்கும் வல்லுநர்கள்

**...ங்கம்மையில் புதுவடிவிலான ...மாக பரவிவரும் நிலையில், ...ண்டி, கென்யா, ருவாண்டா மற்றும் ...ளுக்கும் பாதிப்பானது பரவியுள் ...ள் அச்சத்தில் உறைந்துள்ளன.**



உலக சுகாதார நிறுவனத்தின் கணக்குப்படி, இந்த ஆண்டு மட்டும் இந்த குரங்கம்மை வைரஸ் பாதிப்பால் 615 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆபிரிக்க நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தின் தகவலின்படி, இந்த ஆண்டு மட்டும் 13 ஆபிரிக்க நாடுகளில் 3641 பேர் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

622 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை நிலவரத்தின்படி, நைஜீரியாவில் 40 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கெனவே, உலக சுதாகார அமைப்பு இந்த பரவலை அவசர நிலையாக அறிவித்துள்ளது. இத்தகைய சூழலில்தான் உலக நாடுகள் அனைத்தும் மிகத் தீவிரமான ஆய்வில் மூழ்கியுள்ளன. எதிர்பார்த்ததை விட வேகமாக பரவி வருவதால், ஆய்வாளர்கள் மிக உன்னிப்பாக கவனித்தும் வருகின்றனர்.

அதிலும், வைரஸ் பரவலை கண்காணிப்பதற்கான போதிய நிதி அல்லது உபகரணங்கள் இல்லாத நாடுகளில் பரவும் திறன் வேகமாக உள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

ஏனெனில், வைரஸ் பரவும் திறன், வைரஸ் ஏற்படுத்தும் நோயின் தீவிரம் போன்றவற்றை சரியாக கையாள, வைரஸை முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்கின்றனர் ஆய்வாளர்கள். (நி-6)

## ஜப்பானை தாக்கிய சூறாவளி மூவர் உயிரிழப்பு



(டோக்கியோ)

ஜப்பானின் தென் பகுதியைத் தாக்கிய சக்தி வாய்ந்த சூறாவளி காரணமாக மூவர் உயிரிழந்துள்ளனர்.

12.5 மில்லியன் மக்கள் வாழும் Kyushu தீவில் இவ்வாறு சூறாவளி ஏற்பட்டுள்ளது.

மணித்தியாலத்திற்கு சுமார் 252 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் 24 மணித்தியாலங்களில் 600 மில்லிமீற்றர் வரை மழை பெய்யலாம் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஆயிரக்கணக்கானோருக்கான மின் விநியோகமும் தடைப்பட்டுள்ளது. (நி-6)

## தனிநபர் புகைப்படங்களை அனுமதியின்றி வெளியிட்டால் சிறை

(டில்லி)

தனிநபரின், புகைப்படங்களை அனுமதியின்றி சமூக வலைத்தளங்களில் வெளியிட்டால் 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அல்லது ரூ. 3 இலட்சம் வரை அபராதம் விதிக்கப்படும் என சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

சமூக வலைத்தளப் பயன்பாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த அறிவிப்பு



வெளியாகியுள்ளது.

அத்துடன், இணையத் தளங்களில் தனியுரிமையினை மதிக்கவும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆட்சியில் இடமில்லை

## அநுர உறுதிபடத் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் அரசியல் பழிவாங்கல்கள் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் மக்களின் பணத்தினை கொள்ளையடித்தவர்கள் நிச்சயமாக சட்டத்தின் முன்னிறுத்தப்படுவார்கள் என கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டை வீழ்ச்சியில் இருந்து கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தில் ஒரு போதும் ஊழல் வாதிகளை இணைத்துக் கொள்ளப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை கந்தளாய் சேருவில பகுதியில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் மக்கள் பேரணியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“செப்ரெம்பர் 21 ஆம் திகதி தேர்தலன்று யாரை தெரிவு செய்யவேண்டும் என்பதை மக்கள் தீர்மானித்து விட்டார்கள் என்பது இப்போது தெளிவாக தெரிகின்றது.



தேசிய மக்கள் சக்தியின் வேலைத்திட்டங்களில் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். எனவே நாம் அமோக வெற்றியீட்டி நாட்டின் ஊழல் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்போம்.

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை மேற்கொள்ளப்படமாட்டாது. ஆனால் ஊழல்வாதிகளை சட்டத்தின் முன்னிறுத்துவோம்.

மக்களின் பணத்தினை கொள்ளையடித்தவர்கள் நிச்சயமாக சட்டத்தின் முன்னிறுத்தப்படுவார்கள். நாம் நாட்டை வீழ்ச்சியில் இருந்து கட்டியெழுப்புவோம்.

நாம் மக்களுடனேயே ஒன்றிணைந்து செயற்படுவோம். மக்களின் பணத்தினை கொள்ளையிட்டு மக்களை வறுமைப்பிடியில் சிக்க வைத்தவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும் என அநுரகுமார திசாநாயக்க மேலும் தெரிவித்தார். (நி-6)





கலாநிதி.செ.மோகனதாஸ் சுவாமிகளின்

பவளவிழாவும்

அறம் பாலிக்கும் ஞான மோகனம் நூல் வெளியீடும்

இடம்: சந்நிதியான் ஆச்சிரம், செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு

காலம்: 31.08.2024 சனிக்கிழமை காலை 8.30 மணி

அன்பர்கள் அனைவரும் அகவை 75 இல் கால் பதிக்கும் சுவாமிகளை வாழ்த்தி ஆசி பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

சைவ கலைபண்பாட்டுப் பேரவை, சந்நிதியான் ஆச்சிரமம், செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு




## கற்பக விநாயகர் துணை

## காரைநகர் களபூமி-கரப்பிட்டியந்தனை அருள்மிகு கற்பக விநாயகர் மஹாகும்பாபிஷேகம்காண்போர் குவலயத்தில் உயர்ந்து அன்புநெறி, அறநெறி, சைவநெறியில் மறுமையிலும் பெருவாழ்வு பெறுவோம்

**முன்னவனே யானைமுகத்தவனே முத்தி நலம் சொன்னவனே தூய் மெய்ச்சுகந்தவனே-மன்னவனே சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே தற்பரனே நின் தாள் சரண்! கற்பக விநாயகனே பொற்பாதம் சரண்!**

ஓங்காரத்தை உச்சரித்தால் உயர்வுறுவர்,உயர்கதி பெறுவார், ஓங்கார ஒலி உயிர் குற்றங்களை அகற்றுகிறது. இவ்வாறு ஒளிக்கீற்று அருள்மிகு கற்பக விநாயகர் நம்மை நன்நெறிப்படுத்தி, நற்கதி தருவார் அருள் மிகு விநாயகர் ஓம்காரம் இறைவனை உணர்ந்து ஒலி, சொல், அறுகம்புல் சாத்தி வழிபட்டால் பேரின்பம் அடையலாம். கற்பக விநாயகர் ஆலய எஜமானுக்கு ஓர் வழக்கில் அந்த கொப்பியை மாற்றி நீதிமன்றத்திலும் விடுதலை கொடுக்க, அவர் உடனே ஆலயம் வந்து கண்ணீர் சொரிய அறுகம்புல் சாத்தி வழிபட்டவர்.

அந்த நாளில் நம் முன்னோர்கள் சமூகத்தில் ஏதும் பிரச்சினை வந்தால் நீதிமன்றம் போவதில்லை. ஆண்டி முனிவர் வைத்த ஐயரும் பொய்யோ எனவும், களபூமி மக்கள் காசி நாதர் வைத்த விநாயகர் பொய்யோ என சமாதானம் அடைந்து நல்ல மதிப்போடு வாழ்ந்த ஊர் தான் காரைநகர்.


**இன்று நம்மில் இறை நம்பிக்கை நலிந்து . நீங்கி சிறு சிறு பிரச்சனைக்கும் நீமன்றம் சென்று** அவமானப்பட்டு , பணமும் **இழந்து நடை மெலிந்து போகாமல் விண்ணுக்கு ஒருமருந்து கண்ணுக்கு இனியவனைப்பாடி திருமுறைகளை ஓதுவோம்.** இந்த ஆலயமும் 15 வருடமாக வாஸ்து ஸ்தானமாக இருந்து இன்று சிறப்பான திருப்பணி நடைபெற்று கும்பாபிஷேகம் நடத்திய ஆலய நிர்வாகத்தையும், களபூமி மக்களையும் கற்பக விநாயகர் அருளைப் பாராட்டி விநாயகர் அகவல், விநாயகர் அநுபூதி ஓதுவோம் தினம், தினம் வழிபடுவோம்.

**“பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவானிலும் நனிச்சிறந்ததுவே”** எனத் தாயோடு இணைந்து பிறந்த நாட்டுடன் சங்கமித்து வாழும் போது அதுவே தேவவுலக வாழ்விலும் பார்க்க அதி விஷேடமாகும் என்பது வசிட்டரிஷியின் வாக்கு. நாடே உலகம், வீடே கோவில் , தாய் தந்தையர்களே சிவமும், சக்தியுமாவர். இவ்வாறு அறிவுப் பொக்கிஷங்களான ஆகம, சாஸ்திர, இதிகாச நூல்கள் அவற்றை உலகிற்கு உணர்த்தி நிற்கின்றன. இந்த உணர்வுகள் தான் மனிதனைப்பக்குவப்படுத்தி, நல் வாழ்வில் வாழ வைத்து முக்தியடையும் மார்க்கத்தை வழிகாட்டி நிற்கும். இதன் வழியே ஆலய தரிசனமும் கும்பாபிஷேகமும் செம்மை பெறும். பேரருள் பெற்று உய்யலாம்.

திருமூலர் திரு மந்திரத்திலே “ஐந்து கரத்தனை , யானை முகத்தனை” இங்கு பற்றுள்ளதையும் பிறப்பிப்பதும், பிணித்து நிற்பதும் , படைத்தலையும் ஓர் கை, பாசத்தைக் குறிப்பது ஓர் கை, பிறவி எடுத்தாலே இன்ப , துன்ப வினை மாறி மாறி ஆழ நாம் இறைவனை வழிபட்டு விடுபட **அஞ்சாதே எனப்பாதுகாக்கும் ஓர் அபயக்கை** , அழித்தல் தொழிலைச் செய்யும் அங்குசம் தாங்கிய கை **“கற்பக விநாயகரே” அபயம் என் உயிர்கற்கு அருளைச்செய்வது மோதகம் ஏந்திய கை கீழ் நோக்கிய பிறவிக்கு அஞ்சி ஆசார சீலராக வழிபடும் உயிர்களுக்கு அடையுமிடமாகிய திருவடியாகிய முத்திப்பேறு அருளுவது** துரோதானமாகிய மறைத்தல் தொழிலை செய்வது தும்பிக்கையே! இடது கொம்பு பதி ஞானத்திற்கு உரியது. ஒடிந்த வலது கொம்பு பாச ஞானத்திற்கு உரியது. உயிர் மலங்களின் பிணிப்பால் துன்பம் படாமல் இரு சுளகு போன்ற செவிகளை காக்கின்றன.

சர்வபோதகம் தா-மஹாதேவக்குருக்கள் அவர்களது மகன்கள் ம.சோமசுந்தரக்குருக்கள், ம. தானுநாதக் குருக்கள், ம. ஸ்ரீவத்ஸாங்க குருக்கள் மற்றும் சே. சிவபாலசர்மா, கி.கௌரிசங்கர் சர்மா, சோம அரவிந்தக்குருக்கள், இ.வெங்கடராமக்குருக்கள், வெ.மயூரநாதக்குருக்கள், பொ.வரதராஜர் குருக்கள், புவனேந்திர விக்னகரக்குருக்கள் மற்றும் பலசிவச்சாரியார்களும். உருவமற்ற நீர் கும்பத்தில் ஊற்றும்போதே கும்பத்தின் வடிவைப் பெறுவது போல உருவமற்ற எம் குலதெய்வம் கற்பக விநாயகர் உயிர் மீதுள்ள கருணையினால் உருவம் கொள்கிறார். அதற்கு பஞ்சபூதங்களும் துணையாகி கும்பிக்கும் இடமே யாகசாலை. அதாவது இறையாற்றலை சிவச்சாரியார் தனது வழிபாட்டுத்திறனால் ஆகாயத்தில் இருந்து காற்று வழியாக மந்திரங்களால் இறக்கி, யாகசாலைக் குண்டலத்தில் எரியும் நெருப்பில் உயர்ந்து ஆகமவிதிப்படி உள்ள திரவியங்களை ஆகுதி செய்து குவித்து, யாகசாலை அக்கினியில் இருந்து கும்பத்தின் அருள் நீரால் கற்பக கிரகத்தில் அபிஷேகமாக தெய்வீக அருளைச் சேர்த்து நடைபெறுவது அருள் மஹா கும்பாபிஷேம் ஆகும். இறைவனைத்தாங்கி நிற்கும் ஆலயமும் அவரை உணர்ந்து கொள்ள உதவும் சிவாச்சாரியார்களது பூசையும் , ஆராதனையும், திருமுறைகளும் உலகையும் நம்மையும் சைவநெறி, அன்பு நெறியில் வாழ வைக்கும். மகாகும்பாபிஷேகம் கண்டவர்கள் பெருவாழ்வும் , சிவன் தாழ் சேர்வார்கள். மகாகும்பாபிஷேகம் செய்த சிவாச்சாரியார்கள் இதனை நடத்திய தர்மகர்த்தாக்கள், உதவியவர் யாவரையும் வாழ்த்தி வணங்கி, திருமுறைகள் தினம் ஓதுவோம் நற்கதி பெறுவோம்.

க.கு.க.சிவபாலன் (k.k.k)
போசகர் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம், மாணிக்கவாசகர் மடாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 ஆண்டுகளின் பின்னர் 4 குற்றவாளிகள் அடையாளம்

(மன்னார்)

கடந்த 2012 ஆம் ஆண்டு மன்னார் நீத வான் நீதிமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பான வழக்கின் தீர்ப்பு நேற்று மன்னார் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது குறித்த 52 சந்தேக நபர்களில் 4 சந்தேக நபர்கள் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட் டுள்ள நிலையில் ஏனைய 48 சந்தேக நபர்களும் விடு விக்கப்பட்டதுடன் குறித்த 4 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தர விட்டார்.

கடந்த 12 வருடங்களாக நடைபெற்று விசாரணை கள் யாவும் நிறைவ டைந்த நிலையில் நேற்று தீர்ப்புக்காக திகதியிடப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை குறித்த 4 சந்தேக நபர் களையும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது. (நி-6-285)

## பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் தேர்த் திருவிழாவை முன்னிட்டு ஆண்டுதோறும் நடை பெறுகின்ற நயினை- நல் லூர் திருத்தல பஜனைப் பாதயாத்திரை நேற்று நயினை நாகபூசணி அம் பாள் ஆலயத்தில் பூசை வழிபாட்டுடன் வேல் எடுத் துக் கொண்டு ஆரம்பமான பாதயாத்திரை குறிகட்டு வான், புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டை தீவு, பண்ணை, யாழ் வில் லூன்றி, கந்தர்மடம் வழி யாக நாளை மறுதினம் நல்லூரான் திருத்தலத்தை சென்றடையவுள்ளது. (நி-6)

## பூநகரி மக்களை சந்தித்து கலந்துரையாடிய சிறீதரன் எம்.பி

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத் தின் பூநகரி பிரதேச மக் களை பாராளுமன்ற உறுப் பினர் சிவஞானம் சிறீதரன் நேரில் சந்தித்துக் கலந்து ரையாடி யுள்ளார்.

கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற இச் சந் திப்பில் பூநகரி பிரதேச சபை யின் மேனாள் தவிசாளர் சிவ குமாரன் ஸ்ரீ ரஞ்சன், மேனாள் உப தவிசாளர் முடி யப்பு எமி லியாம் பிள்ளை, பூநகரி பிரதேச சமூக மட்ட அமைப்பு களின் பிரதி நிதி கள், கட்சி உறுப் பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பூநகரி பிர தேச மக்களின் உடனடித் தேவைப்பாடுகள், உட்கட்ட மைப்பு அபிவிருத்திகள், அது சார்ந்த மக்களின் எதிர்பார்ப்புகள் என்பவை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கேட்டறிந்து கொண்டார்.

குறிப்பாக எதிர்வரும் செப் ரெம்பர் 21ஆம் திகதி நடை பெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான மக்க ளின் கேள்விகளுக்கும் பாரா ளுமன்ற உறுப்பினர் சிறீதரன் பதலளித் திருந்தமை குறிப்பிடத்தக்கது (நி-6-316).

## படகு விபத்து- இருவர் மீட்பு
### ஒருவர் மாயம்: கரையொதுங்கிய சடலம்

(மன்னார்)

ராமேஸ்வரம் மீன்பிடி துறை முகத்தில் இருந்து கடந்த 26 ஆம் திகதி கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற டெல்வின் ராஜ், வெள்ளைச்சாமி, சுரேஷ், எம ரிட் ஆகிய நான்கு மீனவர்கள் மீன்பிடித்து விட்டு கரை திரும் பிய போது சூறைக்காற்று கார ணமாக நடுக்கடலில் படகு மூழ்கி விபத்துக்குள்ளானதில் இருவர் மீட்கப்பட்ட நிலையில் மற்றைய இரு மீனவர்களை தேடி வந்த நிலையில் ஒரு வரின் சடலம் மீட்கப்பட்டுள் ளது.

மூழ்கிய படகில் இருந்து டெல்வின் ராஜ், சுரேஷ் ஆகிய இரண்டு மீனவர்கள் நீந்தி இலங்கை கடற்படையினரின் உதவியால் யாழில் உள்ள இந்திய துணை தூதரக அதி காரியிடம் ஒப்படைக்கப்பட்டு விமானம் மூலம் தாயகம் திரும்பி உள்ளதாக அதிகாரி கள் தகவல் தெரிவித்துள்ள னர்.

இந்நிலையில் மாயமான மீனவர்கள் இருவரையும் தேடி வந்த நிலையில் நேற்று முன் தினம் மாலை நடுக்கடலில் மாயமான மீனவர் எமரிட் உயிரிழந்த நிலையில் சடல மாக மீட்கப்பட்டுள்ளார், உட லைக் கைப்பற்றிய மீனவர்கள் ராமேஸ்வரம் மீன்பிடி துறை முகத்திற்கு உடலை எடுத்து வந்து சேர்த்திருந்தனர். இதை யடுத்து உடற்கூற்று பரிசோத னைக்காக ராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் வைக் கபட்டுள்ளது. (நி-6-285)

## சமஷ்டியை - அங்கீகரிக்குமாறு
### ஜனாதிபதி வேட்பாளருக்கு வலியுறுத்துவோம்
### அருட்தந்தை சக்திவேல்

**(நெளுக்குளம்)**

**சமஷ்டியை அங்கீகரிக்குமாறு தெற்கின் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு வலியுறுத்தவும் சர்வதேச காணாமலாக்கப்பட்டோருக்கான தினத்தில் ஒன்று திரள்வோம் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.**

நேற்று வெளியான ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது,

ஆயுத யுத்தம் மௌனிக் கப்பட்டதன் பின்னர் கடந்த 15 வருட காலமாக வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தமது அன்புக்குரி யவர்களைத் தேடி கிடைக் காத நிலையில் 2500 நாட்களாக தொடர் போராட் டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இன்று சர்வதேச காணாமல் ஆக்கப் பட்டோருக்கான தினத்தில் கவனயீர்ப்பு போராட்டத் தினை நடத்துவதற்கு ஆயத் தங்களை செய்துள்ளனர்.

இப் போராட்டத்திற்கு அரசியல் கைதிகளை விடு தலை செய்வதற்கான தேசிய அமைப்பு தமது முழுமை யான ஆதரவை தெரிவிப்ப தோடு வடகிழக்கு வாழ் அனைவரும் இப் போராட் டத்திற்கு ஒத்துழைப்பு வழங் குமாறும் அதில் குறிப்பி டப்பட் டுள்ளது. (நி-6-299)

## 'பூக்களைப் பறிக்காதீர்கள்' விழிப்புணர்வு வீதி நாடகம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் சிறுவர் களின் பாதுகாப்பு அவர் களின் உரிமைகள் தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக் கில் நேற்று முன்தினம் "பூக்களைப் பறிக் காதீர்கள்" எனும் வீதி நாடகம் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்ணகைபுரம் மெதடிஸ்த திருச்சபையில் இயங்கிவரும் வெஸ்லியன் சிறுவர் அபிவி ருத்தி நிலையத்தின் ஏற்பாட் டில் குறித்த வீதி நாடகம் அரங் கேற்றப்பட்டது.

கண்ணகைபுரம் மற்றும் முட்கொம்பன் சிறுவர் அபி விருத்தித் திட்டப் பணியாளர் களினால் இது அரங் கேற்றப் பட்டது.

இந் நாடகம் நேற்று முன் தினம் காலை 11 மணிக்கு கண்ணகைபுரம் மெதடிஸ்த திருச்சபை வளாகத்திலும் மதி யம் 1 மணிக்கு முட் கொம்பன் பாடசாலை மைதானத்திலும் மாலை 3 மணிக்கு பூநகரி சாமிப்புலம் கிராமத்திலும் அரங்கேற்றப்பட்டது.

இதன்போது சிறுவர் பாது காப்பு தொடர்பான பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் கிளி நொச்சி மாவட்ட செயலக சிறு வர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ். ஜெயக் கணேஷ் அவர்களின் விழிப் புணர்வூட்டும் வகையிலான கருத்துரையும் இடம் பெற்றது. (நி-6-286)

## ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதி வான் நீதிமன்றத்தில் ஏல விற்பனை எதிர்வரும் 03.09.2024 ஆம் திகதி அன்று காலை 8.30 மணிக்கு எமது நீதிமன்ற வளாகத்தில் 36 டிப்பர் மணல், 4 டிப்பர் மண் மற்றும் 107 கிலோ மஞ்சள் ஏல விற்பனை நடை பெறவுள்ளது.

என கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதி மன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-6)

## அநாமதேய சுவரொட்டிகள்
### மன்னார் நீதவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பு

(மன்னார்)

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு எதிராக கொழும்பில் ஒட்டப்பட்ட அநாமதேய சுவ ரொட்டிகளுக்கு எதிர்ப்புத் தெரி வித்தும் குறித்த சம பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்ய கோரியும் நேற்று மன் னார் நீதவான் நீதிமன்ற சட்டத் தரணிகள் பணிப் பகிஷ் கரிப்பில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக நேற்று விசாரணைகளுக்காக அழைக் கப்பட்ட அனைத்து வழக்கு களும் பிரிதொரு தினத்திற்கு தவணை இடப்பட்டுள்ளது.

மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தினால் குறித்த சம்ப வத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று அடையாள பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கவுள எதாக சட்டத்தரணிகள் சங் கத்தின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி இ.கயஸ் பெல்டானோ தெரிவித் தார். (நி-6-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரின் அழுத்தங்களால் நோய்களுக்கு ஆளாகும் பிள்ளைகள்!

## புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களின் பெற்றோர்களுக்கு எச்சரிக்கை

**(கொழும்பு) ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு முகம்கொடுக்கவிருக்கும் பிள்ளைகளுக்கு சில பெற்றோர்கள் கொடுக்கும் அழுத்தங்களினால் அவர்கள் பல நோய்களுக்கு ஆளாகியுள்ளதாக ரிட்ஜ்வே வைத்தியசாலையின் சிறுவர் வைத்திய நிபுணர் டொக்டர் டிபால் பெரேரா தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் புலமைப்பரிசில் பரீட்சை காரணமாக பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு கொடுக்கும் அழுத்தங்களினால் வயிற்றுவலி, வாந்தி, தலைவலி, சரியான உடல் உழைப்பு இல்லாமை போன்ற பல உபாதைகளுக்கு முகங்கொடுத்துள்ளதாக வைத்திய நிபுணர் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு வைத்தியசாலையிலிருந்தும் பல நோய்வாய்ப்பட்ட பிள்ளைகள் பதிவாகியுள்ளதாக மருத்துவர் தெரிவித்தார்.

மேலும் குழந்தைகளின் மன நிலையை பாதிக்காமல் அவர்களின் கல்விக்கு ஆதரவாக பெற்றோர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குழந்தைகளை சுதந்திரமாக படிக்க அனுமதிக்குமாறு பெற்றோர்களிடம் மருத்துவர் கேட்டுக்கொண்டுள்ளார். (நி-6)

## சஜித்துடன் இணைந்த பெரமுன எம்.பி



(கொழும்பு) எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்துள்ளார்.

இவர் கடந்த தேர்தலில் கொழும்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்திற்கு பிரவேசித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு

### திருமலை மாவட்ட தமிழரசு கட்சி தீர்மானம்


(திருமலை) தமிழ்ப் பொதுவேட்பாளராக களமிறங்கியுள்ள பா.அரியநேந்திரனுக்கு ஆதரவு வழங்குவது என தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நேற்றுக் காலை 10 மணிக்கு இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை அலுவலகத்தில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குகதாசன் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களிடையே கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் நீண்ட விவாதம் இடம் பெற்றிருந்தது.

குறித்த கலந்துரையாடலின் இறுதியில் ஒருமித்த முடிவாக தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்து சங்கு சின்னத்துக்கு வாக்களிப்பது என்ற முடிவினை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி-6)

## பணிகளை ஆரம்பித்த தேர்தல் கண்காணிப்பாளர்கள்



(கொழும்பு) ஜனாதிபதித் தேர்தலை கண்காணிப்பதற்காக இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் நேற்றுக் காலை தமது கடமைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைமைப் பார்வையாளராக நாச்சோ சான் செஸ் அமோ உள்ளார்.

நாச்சோ சான்செஸ் அமோ, ஸ்பெயினை பிரதிநிதித்துவப்படுத்தி ஐரோப்பிய பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஆவார்.

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவில் 10 முக்கிய பார்வையாளர்கள் உள்ளனர்.

மேலும், நாடு முழுவதும் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் 26 கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (நி-6)

## யாழில் 3 தீவுகளுக்கான கலப்பு மின் திட்டம்

### முதற்கட்ட நிதியை வழங்கியது இந்தியா



(கொழும்பு) இந்திய நிதியுதவியின் கீழ் நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவில் கலப்பு மின் திட்டங்கள் அமைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான முதல் தவணை நிதியை இந்தியா உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவினால் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுலக்ஷன ஜயவர்தன மற்றும் இலங்கை சுனித்யா எரிசக்தி அதிகார சபையின் தலைவர் ரஞ்சித் சேபாலா ஆகியோரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இந்த திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் 2022ஆம் ஆண்டு மார்ச்சில் இலங்கையும் இந்தியாவும் கையெழுத்திட்டிருந்தன.

அத்துடன் கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி இலங்கை சுனித்யா எரிசக்தி அதிகாரசபை மற்றும் யு சோலார் கிளீன் எனர்ஜி நிறுவனத்திற்கு இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.

இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பின், அந்த தீவுகளுக்கு மின்சாரம் வழங்கப்படும். தற்போது, ஆரம்ப கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டு மார்ச் மாத தொடக்கத்தில் இத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் இலங்கையிடம் ஒப்படைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக இந்தியா 11 மில்லியன் டொலர் நிதியுதவி அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## சுவாசம் தொடர்பான நோய்கள் அதிகரிப்பு



(கொழும்பு) இலங்கையில் சுவாசம் தொடர்பான நோய்கள் தற்போது அதிகரித்து வருவதாகச் சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

சுவாச ஆரோக்கியம் தொடர்பான தேசிய சுகாதார மற்றும் பராமரிப்பு ஆராய்ச்சி நிறுவனத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நகரமயமாக்கல், வளி மாசுபாடு, காலநிலை மாற்றம் போன்ற காரணிகளால் சுவாச ஆரோக்கியம் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இலங்கையில் சுவாச நோய்களின் ஆபத்தைக் குறைக்கும் நோக்கில் பல்வேறு திட்டங்களை ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பிறரின் நம்பிக்கையைப் பெற எளிய வழி நமக்கு அவர்கள் மீது உள்ள நம்பிக்கையை உணர வைப்பதே ஆகும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கருத்துக் கணிப்புக்கு தடை விதிக்க வேண்டும்

தேர்தல்கள் தொடங்கிவிட்டால் போதும் கருத்துக் கணிப்புகள் வெளிக்கிளம்பி விடும்.

பொதுவில் தேர்தல் முடிவுகள் மட்டுமே உண்மையான பெறுபேறாக இருக்க முடியும்.

ஆனால், சில அமைப்புகள் தேர்தல் தொடர்பில் கருத்துக் கணிப்புகளை நடத்தி தேர்தலில் அவருக்குச் சாதகம்; இவருக்குப் பாதகம் என அறிக்கை விடுகின்றன.

இன்னும் சில அமைப்புகள், தேர்தலில் இவர்தான் வெற்றி பெறுவார் என்பது போல தமது கருத்துக்கணிப்பை முன்வைக்கின்றன.

இவ்வாறு தேர்தலுக்கு முன்பாக நடத்தப்படுகின்ற கருத்துக் கணிப்புகள் எந்தளவு தூரம் நம்பகத்தன்மையானவை என்ற கேள்வி இருக்கவே செய்கின்றது.

ஆக, கருத்துக் கணிப்பு என்ற பெயரால் பக்கச்சார்பான தகவல்கள் பொதுமக்கள் மத்தியில் பரப்பப்படுகின்றன.

உண்மையில் ஜனநாயகத்துக்கு இது ஆரோக்கியமான செயலன்று.

ஆம், சமகாலத்தில் தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்கான நிறுவனமயப்பட்ட அமைப்புகள் செயலாற்றி வருகின்றன.

கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு உடன்படிக்கை செய்துகொண்டு, குறித்த வேட்பாளருக்காக அல்லது குறித்த கட்சிக்காகப் பணியாற்றுகின்ற அளவில் நிலைமை வந்து விட்டது.

இவ்வாறான நிறுவனங்கள் கருத்துக் கணிப்புகள் என்ற பேரால், தாம் சார்ந்த வேட்பாளர்களுக்குச் சாதகமாகக் கருத்துக் கணிப்புகளை வெளியிடும் நுட்பங்களை பிரயோகிக்கின்றன.

இவ்வாறாகக் கருத்துக் கணிப்புக்களை வெளியிடும்போது அவை பொதுமக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தவே செய்யும்.

ஏனெனில் கருத்துக் கணிப்புகள் நேர்மையுடன் நடத்தப்படுவதாகப் பொதுமக்கள் நம்புகின்றனர்.

ஆனால் கருத்துக் கணிப்புகள் நேர்மையானவை என்பதற்கான சான்றுகள் எவையும் இல்லை.

அதேநேரம் கருத்துக் கணிப்புகள் பல சந்தர்ப்பங்களில் பொய்த்துள்ளன.

எனவே பொய்க்கக்கூடிய கருத்துக் கணிப்புகளை வெளியிடுவது ஏற்புடையதல்ல.

ஆகையால், கருத்துக் கணிப்புகளை நடத்துவதற்குச் சட்டரீதியாகத் தடைவிதிக்க வேண்டும்.

இதைச் செய்யாமல், கருத்துக் கணிப்புகளை நம்பாதீர்கள் எனத் தேர்தல் ஆணைக்குழு பொதுமக்களிடம் கேட்பது பொருத்தமற்ற செயலாகும்.

ஆக, கருத்துக் கணிப்புகள் மக்களின் ஜனநாயக உரிமையில் தாக்கத்தை – பாதிப்பை ஏற்படுத்துவதுடன் ஜனநாயகம் பாதிக்கப்படுவதற்கும் அது வழி கோலுவதால், கருத்துக் கணிப்பைத் தடை செய்வது கட்டாய மானதாகும்.

## கச்சதீவில் மீட்கப்பட்ட மீனவர்கள் சென்னைக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கச்சதீவுப் பகுதியில் மீட்கப்பட்ட இரண்டு தமிழக கடற்தொழிலாளர்களையும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக விமானம் மூலம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரம் பகுதியில் இருந்து ஒரு படகில் கடந்த திங்கட்கிழமை கடற்தொழிலுக்கு சென்ற நான்கு தமிழக கடற்தொழிலாளர்கள் படகு கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானதில், நால்வரும் கடலில் மூழ்கியுள்ளனர்.

அவர்களில் இருவர் கச்சதீவுப் பகுதியை நோக்கி நீந்திக் கரை சேர்ந்திருந்தனர். ஏனைய இருவர் கடலில் மூழ்கி காணாமல் போயிருந்தனர்.

கரை சேர்ந்த இருவரும் இலங்கை கடற்படையினருக்கு வழங்கிய தகவலின் பிரகாரம் காணாமல் போன இருவரையும் கடற்படையினர் தேடிய நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை சடலமாக மீட்கப்பட்டு, இராமேஸ்வரம் துறைமுகத்தின் ஊடாக சடலம் கையளிக்கப்பட்டது.

இந்நிலையில் கச்சதீவில் கரை ஒதுங்கிய இரு கடற்தொழிலாளர்களையும்இந்திய துணைத்தூதரக அதிகாரிகளிடம் கடற்படையினர் ஒப்படைத்த நிலையில், நேற்று வியாழக்கிழமை இருவரும் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் ஊடாக விமானத்தில் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

(ம-7)

## ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அதிகரிக்கும் முறைப்பாடுகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மேலும் 118 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி ஜூலை 31ஆம் திகதி முதல் நேற்று வரை பெறப்பட்ட தேர்தல் புகார்களின் எண்ணிக்கை 1347 ஆக உயர்ந்துள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பெறப்பட்ட மொத்த முறைப் பாடுகளில், அதிக எண்ணிக்கையானது தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பிலான முறைப்பாடுகள் ஆகும்.

இதற்கு மேலதிகமாக வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 06 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

## விஷஜந்து தீண்டி குடும்பஸ்தர் மரணம்

(கைதடி)

விஷஜந்து தீண்டியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் கைதடி வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை(28) இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த இராசையா தர்மசேனன் (வயது- 45) என்ற மூன்று பிள்ளைகளைகளின் தந்தை யாவார்.

வீட்டிற்கு அருகில் உள்ள நெல் அடுக்கப்பட்டிருந்த அறையை கடந்த புதன்கிழமை (28) முற்பகல் இன்னொருவருடன் இணைந்து துப்பரவு செய்து கொண்டிருந்த போது ஏதோ ஒன்று குத்தி உள்ளது. இதனைப் பொருட்படுத்தாதவர் வேலை முடிவடைந்ததன் பின்னர் வீட்டில் உறங்கியுள்ளார்.

பாடசாலைக்குச்சென்ற பிள்ளைகள் பிற்பகல் வந்த போது அவர் அசைவற்றுக் காணப்பட்டதால் அம்புலன்ஸ் வண்டிக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அம்புலன்ஸ் வண்டியில் வந்தவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

சடலம்யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு நேற்று வியாழக்கிழமை (29) இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார். (ம-7,60)

## மோ.சைக்கிள் மோதி பெண்ணொருவர் பலி

அம்பலாங்கொடை - படபொல வீதியில் பொல்வத்த பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் மோதி வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அம்பலாங்கொடைப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் படபொலவிலிருந்து அம்பலாங்கொடை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியைக் கடக்க முயன்ற வயோதிபப் பெண் ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த பெண் பலபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

அம்பலாங்கொடைப் பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ள நிலையில்,

உயிரிழந்தவரின் சடலம் பலபிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## நாட்டில் டெங்கு மீண்டும் தீவிரம்

(கொழும்பு)

நாட்டில்டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, நாட்டில் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 36,086 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 17 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 14,884 ஆகும்.

அதில் கொழும்பு மாவட்டத்திலிருந்து 8,838 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேலும், வட மாகாணத்திலிருந்து 4,676 டெங்கு நோயாளர்களும், மத்திய மாகாணத்திலிருந்து 3,630 டெங்கு நோயாளர்களும், வடமேல் மாகாணத்திலிருந்து 2,415 டெங்கு நோயாளர்களும், தென் மாகாணத்திலிருந்து 2,633 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-7)

## துப்பாக்கிச்சூடு ஒருவர் மரணம்

கல்கிரியாகம திக்வண்ணாகம பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கல்கிரியாகம திக்வண்ணாகம பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான கருணாரத்ன முதியன்சேலாகே குணசிங்க என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

மார்பில் துப்பாக்கிச் சூடு பட்டதில் பலத்த காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதித்ததன் பின்னரே குறித்த நபர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நல்லூரான் திருவிழவை நான் கண்டு கொண்டேனே ! - கம்பவாரிதி இ.ஜெயராஜ்

### மாம்பழத் திருவிழா

மாம்பழத்துச் சண்டையிலே முருகன் தானும்
மனம் உடைந்து பெற்றோரின் உறவை நீங்கி
தாம் துறவின் கோலமதை கொண்டு அங்கு
தண்டோடு நிற்கின்ற அரிய காட்சி
சோம்புகிற உளமதையும் உயிர்க்கச் செய்யும்
சுகமான அனுபவங்கள் காட்டி நிற்கும்
ஓம்புகிற பெற்றோரே உலகம் என்னும்
ஒப்பற்ற தத்துவத்தை உரைப்பான் கந்தன்.

கம்பவாரிதி இ.ஜெயராஜ்

## நல்லூரில்

### இன்று-மாம்பழத்திருவிழா நாளை-சப்பரதம் ஞாயிறு-தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 22 ஆம் திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை காலை தெண்டாயுதபாணி உற்சவமும் (மாம்பழத் திருவிழா), மாலை ஒருமுகத் திருவிழாவும் இடம்பெறும்.

நாளை சனிக்கிழமை மாலை சப்பரத்திருவிழாவும் நாளை மறுதினம் தேர்த் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (நி-6-33)

## நல்லூரான் திருவடிக்கு... இன்று 22 ஆம் நாள் திருவிழா



### நல்லைக் கந்தவேளே!

நீங்காமற் றுதிசெய்து நின்பதம் பற்றியே
நினைக்குமடி யார்களுக்கு
தீங்கான வொன்றுமே திடமாக வாராது
திண்மையாய்க் காக்கும்வேலே
பாங்காய்மெய் யடியார்கள் பாடியே பரவினால்
பைந்தமிழில் முந்திவருவாய்
ஓங்கார மாயோங்கி ரீங்காரம் புரிகின்ற
ஓம்நல்லைக் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்,
நவ.பாலகோபால்.

## இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் இலங்கை விஜயம்



(கொழும்பு)

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் நேற்று வியாழக்கிழமை இலங்கை வந்துள்ளார்.

அதன்பபடி அரசியல் தலைவர்கள் பலரை அஜித் தோவல், சந்திக்க உள்ளதாகவும் இலங்கையின் சமகால மற்றும் எதிர்கால அரசியல் மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பில் கலந்துரையாட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அஜித் தோவலின் இந்தப் பயணம் தொடர்பில் இராஜதந்திர மட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (நி-6)

## கஜவல்லி உற்சவம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் 21 ஆம் திருவிழாவான நேற்று வியாழக்கிழமை காலை கஜவல்லி மஹா வல்லி உற்சவம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (நி-6-33)

### மாம்பழக் கதையின் நாயகனே!

நல்லூர் பெரும்பதியில் நயமுறவே
வீற்றிருக்கும் வேலவா!
அடியவர்கள் குறைகள் தீர்க்கும் அலங்காரக் கந்தா!
மாம்பழத்திற்காய் உலகை வலம் வந்தாய்
கோபம் கொண்டு கோவண ஆண்டியாய்
பழனி மலை மீது பழம் நீயாக நின்றாய்
நாரதர் கலகம் இன்னும் முடியவில்லை
மாம்பழக் கதையின் நாயகனே பதில் கூறையா!

நயினை விசு.இராசநாயகம்.

## இராசிபலன்

30.08. 2024
ஆவணி 14, வெள்ளிக்கிழமை
துவாதசி பின்னிரவு 4.46 மணிவரை

புனர்பூசம் முன்னிரவு 9.13 மணிவரை
சுபநேரம் -6.05-7.35 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை

சந்திராஷ்டமம் - விசாகம்,அனுசம்.

வளவன்

**மேஷம்** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள்.

**ரிஷபம்** பொது வாழ்வில் புகழ் கூடும், அலங்காரப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, நிதி நிலை உயரும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று ஏற்படலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**கடகம்** குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், தேவையற்ற மனச்சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.

**சிம்மம்** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** அன்பு நண்பர்கள் ஆர்வத்துடன் உதவி செய்ய முன்வருவர், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்** தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்த ஸ்ரீவர்கள் விலகுவர், நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் வாய்ப்புண்டு, தடைகள் விலகி தனவரவுகள் கிடைக்கும்

**விருச்சிகம்** வரவும் செலவும் சமமாகும்நாள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக ஆர்வம் காட்ட வேண்டிய நாள்.

**தனுசு** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அரச வழியில் அனுகூலமுண்டு, இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், ஆரோக்கியமான நாள்.

**மகரம்** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவார், உற்றார் உறவினர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**கும்பம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** தொழில் ரிதியாக வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரும், உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், உடல் நலம் சீராகும், பயணங்கள் கைகூடும்.

இன்பமோ, துன்பமோ வாழ்ந்தான் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே நாளில்...

பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டாரவின் பணிப்புரைக்கமைய சுற்றிவளைப்பு நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபர்களுக்கு எதிராகப் பொலிஸாரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ம-7)

## பொருளாதாரம்...

ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைப் பிரகடனம் நேற்றுக் காலை கொழும்பில் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நெருக்கடிக்கு மத்தியில் நாட்டைப் பொறுப்பேற்றேன். இன்று (நேற்று) நான் வெளியிட்டது தேர்தல் வேட்பாளர் என்ற ரீதியில் வெளியிட்ட விஞ்ஞாபனம் அல்ல.

நாட்டில் நடைமுறைப்படுத்தக் கூடியவையே இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பலர் பல காலத்திட்டங்களை முன்வைத்திருந்தனர். உடனடியாக எது தேவைப்படுகின்றதோ அதனையே செய்வோம்.

வாக்குறுதிகளை அள்ளி வழங்கிப் பொருளாதாரத்தை மீண்டும் வீழ்ச்சியடைய இடமளிக்கமாட்டோம். ஸ்திரத் தன்மையை மேலும் மேலும் உறுதிப் படுத்திப் பொருளாதார அபிவிருத்திக்கு நாட்டை இட்டுச் செல்வதே எமது எதிர்பார்ப்பு.

புதிதாகப் பொருளாதாரக் கொள்கைத் திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை இல்லை. எமக்கு வேலைத்திட்டங்கள் உள்ளக சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி அதேபோல் கடன் வழங்குனர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தங்கள் காணப்படுகின்றன.

அதனூடாக எமது பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும். பொருளாதாரம் அபிவிருத்தி அடைந்து வரும் நிலையில் மக்களுக்கு நிவாரணம் வழங்க உள்ளோம். உறுமய -20 இலட்சம் காணி உறுதிப்பத்திரம் வழங்கினோம்.

தோட்ட மக்களுக்கு காணி உரிமை வழங்குவோம். சிறுநடுத்தர வியாபாரங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை, வாழ்க்கைச் செலவினைக் குறைத்தல், வேலைவாய்ப்பு, வரி நிவாரணம் வழங்குதல், பொருளாதார அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், ஏற்றுமதிப் பொருளாதாரத்தினை வலுப்படுத்தல் மற்றும் உறுமய, அஸ்வெசும நிவாரணத் திட்டங்களைத் தொடர்ந்தும் முன்கொண்டு செல்லுதல் இவையே எமது திட்டமாகும்.

நாட்டிற்குப் புதிய திட்டங்களை முன்வைத்து அதனைச் செய்வதாக விவாதிக்க வேண்டிய காலம் இதுவல்ல. நடைமுறையில் என்ன தேவைப்படுகின்றதோ அதனையே நாம் கூறுகின்றோம். நாட்டில் முதலீடுகளை ஆரம்பித்தல், உற்பத்தித்துறையினை அபிவிருத்தி செய்தல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையினை வலுப்படுத்தல், டிஜிட்டல் மயமாக்கலை நோக்கிச் செல்லல், ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு, அரச தனியார் துறையில் வேலைவாய்ப்புக்களை வழங்குவோம்.

இன்று எல்லோரும் கள்வர்களைப் பிடிப்பதாக கூறுகின்றார்கள். நாம் கள்வர்களைப் பிடிப்பதற்கான சட்டங்களை நடைமுறைப்படுத்துவோம். அனைவரும் இயலாது என்று கூறிய போது எம்மால் இயலும் என்பதாலேயே நான் அன்று நாட்டைப் பொறுப்பேற்றேன்.

எனவே செப்ரெம்பர் 21 ஆம் திகதி அனைவரும் சிலிண்டர் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கோருகின்றேன். அன்று முதல் இந்த நாட்டு மக்களின் வெற்றிப்பயணம் ஆரம்பமாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (ம-7)

## யாழ்ப்பாணத்...

சென்றுள்ளனர். வீட்டில் இருந்த பெண்ணின் மாமியார் பெண்ணைத் தூக்கிச் சென்றவர்களை விரட்டியபோது அவரை உதைந்து விட்டுச் சென்றுள்ளனர்.

இதன்பின் மாமியார் வவுனியாப் பொலிஸில் முறைப்பாடு செய்ய, விரைந்து செயற்பட்ட பொலிஸார் குறித்த வாகனம் சென்ற பாதையை பின் தொடர்ந்து சென்றபோது குறித்த வாகனத்தைப்பளைப்பகுதியில்வைத்து மடக்கிப் பிடித்துள்ளதுடன், குறித்த பெண்ணையும் மீட்டுள்ளனர்.

இதன்போது கடத்தலுக்குப் பயன்படுத்திய வாகனம் பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன், நான்கு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மணியந்தோட்டம், இருபாலை, சுன்னாகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நான்கு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த நான்கு பேரையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,250)

## யாழ்.சில்லாலை...

லையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான மைந்தன் இருதயராஜா (வயது-36) என்பவரே உயிரிழந்தவராவார்.

வவுனியா, கற்பகபுரம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை தனது நண்பர்களுடன் விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட இளைஞன் மீது அங்கு வந்த குழுவொன்று கூரிய ஆயுதத்தால் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இதனையடுத்து காயமடைந்த இளைஞன் வவுனியா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மீண்டும் வவுனியா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று மரணமடைந்துள்ளார்.

சம்பவம்தொடர்பில்பூவரசங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,250)

## வெதுப்...

ளது.

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கடந்த சில நாட்களாக உணவு உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களைப் பரிசோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த வாரம் சுழிபுரம் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் ஏற்கெனவே வழங்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பான அறிவுறுத்தல்களை செய்யாத உணவு கையாளும் நிலையங்களை இனங்கண்டு பரிசோதனை நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இதன்போது நீண்டகாலமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத வெதுப்பகம் ஒன்று சிக்கிக் கொண்டது.

மேற்படி வெதுப்பக உரிமையாளருக்கு எதிராக சுழிபுரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் நேற்று மல்லாகம் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது.

நேற்று வழக்குகளை விசாரணைக்கு எடுத்து கொண்ட நீதிமன்றம், வெதுப்பக உரிமையாளருக்கு மொத்தமாக 24 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்ததுடன் வெதுப்பகத்தின் குறைபாடுகள் நிவர்த்தி செய்யும் வரை சீல் வைத்து மூடுமாறு உத்தரவிட்டுள்ளது. (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2024.08.29
சீட்டிழுப்பு இலக்கம் 5580
K 5 2 7 1 3 9
அத சம்பத K 7 1 3 9
சீட்டிழுப்பு இலக்கம் 155
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.08.29
சீட்டிழுப்பு இலக்கம் - 1610
M 06 10 37 47 M
டபுள் சான்ஸ் Double Chance 06035

மெகா பவர்
திகதி 29/08/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1928
H 24 22 36 56 75
Double Chance 43522

லக்கி 7 VIP
திகதி 2024.08.29
சீட்டிழுப்பு இலக்கம் 0406
P 9 4 1 8 6 1 P

கோவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3822
சீட்டிழுப்பு திகதி 29.08.2024
M 29 45 49 56
M 56196

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.08.29
சீட்டிழுப்பு இலக்கம் 0889
விருச்சிகம் 05 23 37 40 விருச்சிகம்
13333 05

விசேட அறிவித்தல் - அபிவிருத்தி லொத்தர் சபையின் கப்ருக லொத்தரின் 2024.08.21 ஆம் திகதி (1722 வது சீட்டிழுப்பு வாரம்) சீட்டிழுப்பின் உத்தியோகப்பூர்வ முடிவுகள் பத்திரிகைகளில் வெளியிடுதலில் வெற்றி இலக்கம் 23க்குப் பதிலாக அச்சுப் பிழை காரணமாக அதில் 03 என குறிப்பிடப்பட்டுள்ளது. அன்றைய திகதிக்குரிய வெற்றி இலக்கங்கள் முறையே பின்வருமாறு காட்டப்பட்டுள்ளதுடன் ஏற்பட்ட சிரமத்திற்கு வருத்தத்தினை தெரிவிக்கின்றோம்.
2024.08.21 ஆம் திகதி - 1722 சீட்டிழுப்பு வாரம் E 07 02 23 64 69

உத்தியோகபூர்வ முடிவுகள்
29.08.2024 வெற்றி வாரம் 288 வர்ணம் மஞ்சள்
D 3 9 3 4 9 0
70431
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,006,728.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2554 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 29.08.2024 தினம் வியாழன்
47 58 62 70 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,702,187.20

சனிதா
திகதி 2024.08.29 வெற்றி வாரம் 4715 வர்ணம் சிவப்பு
03 28 46 51 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,349,776.00
ரூ. 100,000/- 57100

சீட்டிழுப்பு வாரம் 4266 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.08.29 தினம் வியாழக்கிழமை
22 44 45 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,728,868.00
194533

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 01 12 14 32 35
1730 சமெஞ்சள் 29.08.2024 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 541,827,897.00

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை வெற்றி வாரம் 2380
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,642,217.60
சீட்டிழுப்பு திகதி 2024.08.29
08 22 45 71 O
848234
DLB வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைவரும்...

யாடப்பட்டது.

இதன்போது கருத்து வெளியிட்ட இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பது குறித்து தான் எதனையும் கூறப்போவதில்லை எனவும், இருப்பினும் அனைவரும் ஒற்றுமையாக ஒருமித்துநின்று, தமிழ் மக்களின் வாக்குகளை உபயோகமான முறையில் பயன்படுத்துவதே சிறந்த தீர்மானமாக அமையும் என்று தான் கருதுவதாகவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் கலந்துகொள்வதற்கு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறீதரன் மற்றும் எம்.ஏ.சுமந்திரனுக்கும், ரெலோவின் சார்பில் அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனுக்கும், புளொட் சார்பில் அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் அதன் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அதன்படி சந்திப்பில் சிறீதரன், சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் கஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்த போதிலும், வெளிநாட்டுப் பயணமொன்றுக்குச் செல்லவேண்டியிருந்ததன் காரணமாக, சந்திப்பின் தொடக்கத்திலேயே சிறீதரன் வெளியேறினார்.

அதற்கமைய இச்சந்திப்பில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் ஜனாதிபதித் தேர்தல் நிலைவரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதற்கான தமிழ்ப் பொதுக் கட்டமைப்பின் தீர்மானம் குறித்தும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இத்தகைய மாறுபட்ட நிலைப்பாடுகள் தொடர்பிலும், தமிழ் மக்களின் வாக்குவீதம் குறித்தும் கேட்டறிந்த அஜித் டோவல், இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் அனைவரும் ஒற்றுமையாக ஒருமித்துநின்று, தமிழ் மக்களின் வாக்குகளை உபயோகமான முறையில் பயன்படுத்துவதே சிறந்தது என ஆலோசனை வழங்கினார். (ம-7)

## 13 ஆவது...

கொழும்பில் நேற்று தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்ட சஜித் பிரேமதாஸ, அதில் வடக்கு, கிழக்குக்கு அதிக முக்கியத்துவத்தை அளித்துள்ளார்.

அதில், மதத் தலைவர்கள், பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து முறையாகக் கருத்துக்களைப் பெற்று தற்போதைய அரசியலமைப்பை மாற்றிப் புதிய அரசியலமைப்பை உருவாக்க ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் கூட்டணி அர்ப்பணிப்புடன் உள்ளது.

இந்தச் செயல்முறையில், எமது கொள்கை என்னவென்றால், தற்போதைய அரசியல் முறையை ஒரே நாட்டுக்குள் 13 வது அரசியலமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் அதிகபட்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய பாராளுமன்ற முறைமைக்கு மாற்றுவதாகும்.

முடிவெடுக்கும் செயல்முறையில் குடிமக்களை செயலில் ஈடுபடுத்த கிராம அரசு மற்றும் நகர அரசு எனப்படும் சமூக அடிப்படையிலான ஜனநாயக நிறுவனங்கள் உருவாக்கப்படும்.

புதிய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்படும் வரை, 13 வது திருத்தம் உட்பட தற்போதைய அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

அரசியலமைப்பு மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை ஜனாதிபதியினால் ஒருதலைப்பட்சமாக மீண்டும் பொறுப்பெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்பதுடன், மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளை வலுப்படுத்தி, மாகாண சபைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவோம்.

இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் கீழ் தேவையான முறையில் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவோம் எனவும் கூறியுள்ளார்.

6 மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும், மேலும் அதிகபட்ச நிதித் திறன் மற்றும் செயற்திறனுடன் மாகாண சபைகள் செயற்படுவதை உறுதிசெய்ய விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம், காணாமல் போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீட்டு அலுவலகம் ஆகியவை வலுப்படுத்தப்பட்டு அவற்றின் நோக்கங்களை திறம்பட செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இடம்பெயர்ந்தவர்களுக்கு மீள்குடியேற்ற வசதிகளை வழங்குவோம். பாதுகாப்புத் தேவைகளுக்கு தேவையற்ற அனைத்து நிலங்களும் தாமதமின்றி அவற்றின் உரிமையாளர்களுக்குத் திருப்பி அளிக்கப்படும். அரசு ஆதரவுடன் மக்கள் தொகை மாற்றங்கள் செய்யப்படாத கொள்கை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும்.

மேலும், மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான முதலீடு செய்ய விசேட சலுகைகள் மற்றும் ஊக்கத் தொகைகள் வழங்கப்படும்.

உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், சமூக மேம்பாட்டுப் பணிகள் மற்றும் நிலைபெறுதகு பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீண்டும் கட்டமைக்கவும் அபிவிருத்தி செய்யவும் நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை உறுதிசெய்வதற்கு ஒரு சர்வதேச ஒத்துழைப்பு மாநாட்டை ஏற்பாடு செய்வோம் என்றும் சஜித் பிரேமதாஸ தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியுள்ளார்.

அத்துடன், சட்டவிரோதமாக தள்ளிப்போடப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல்களை விரைவாக நடத்த தேவையான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் குடிமக்கள் எளிதாக நீதியைப் பெறும் வகையில், மேல்முறையீட்டு நீதி மன்ற விசாரணைகள் ஒவ்வொரு மாகாணத்திலும் நடத்தப்படவும் உரிய சட்ட ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் இதற்கு அடிப்படை உரிமைகள் மற்றும் மொழி உரிமைகள் தொடர்பான அடிப்படை நீதிமன்ற அதிகாரம் வழங்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். (ம-7)

## யாழ். இந்துவின் பரிசளிப்பு தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 2024 ஆம் ஆண்டுக்கான பரிசில் தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் கல்லூரியின் குமார சுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் இ.செந்தில் மாறன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இதயச் சிகிச்சை நிபுணரும், யாழ். இந்துவின் பழைய மாணவருமான பூ.லக்ஸ்மன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (1817)

076 825 7716 (ஆகாஸ்)

காணி விற்பனைக்கு

தனங்கிளப்பில் பூநகரி பிரதான வீதியில் இருந்து 100 மீற்றர் அருகாமையில் 4 பரப்பு, 4¾ பரப்புக் காணி சிறிய வீடு மின் இணைப்பு மற்றும் 4 பக்கமும் முட்கம்பி வேலி, தென்னைகள் உள்ளடங்கலாக.

பரப்பு - 6 1/2 இலட்சம் (1815)

077 220 3386

Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள்.

(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street, Jaffna.

(C-1080)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு: (289)

074 17 37 684

இந்தியன் விசா சேவைகள்

ஒரு வருட E-Visa இப்போது 9990/= ரூபாவிலிருந்து

யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்களை குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ் CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்) (297)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1080)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

பதவி வெற்றிடம்

- அலுவலகச் செய்தியாளர்கள்
(உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- முகாமைத்துவ உதவியாளர்கள்
(உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
(சாதாரண தரம் கற்றிருத்தல், ஆண்கள்)

பொருத்தமானவர்கள் நேரில் அல்லது **076 097 3121** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ்ப்பாண நகருக்கு அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்,
வலம்புரி நாளிதழ்.

கட்டடம் வாடகைக்கு

கிளிநொச்சி நகரில் கணேசபுரம் பகுதியில் A9 வீதியில் இருந்து 100m தூரத்தில் கீழ்த் தளத்தில் இரண்டு அறைகள், இரண்டு பாத்ரூம், சமையலறை, பெரிய ஹோல் இரண்டாம் மாடியில் 75 - 100 பேர் அமரக் கூடிய பெரிய ஹோல், பாத்ரூம், சமையலறை, இரண்டு பக்கமும் அழகிய பல்கனியும் கொண்ட வீடு மற்றும் கார் பார்க், இளைப்பாறும் குடில்கள் கொண்ட கட்டடம் வாடகைக்கு விடப்படும். வாடகை பேசித் தீர்மானிக்கலாம். பொது நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (1809)

077 531 2937, 075 968 3257


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.